

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (26.03.2025) 96வது தமிழ்நாடு கடல்சார் வாரியக் கூட்டம் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், பொதுப்பணித் துறைஅ ரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், கடல்சார் வாரியத்தின் துணை தலைவர் வெங்கடேசன், நிதித்துறை துணைச் செயலாளர் பிர.திக் தாயள், அன்பரசன் மற்றும் துறைசார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிறு துறைமுகங்கள் வளர்ச்சி பெற

# புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

*சென்னை, மார்ச் 28 -*

சென்னை, தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 5ஆம் தளத்தில் உள்ள பொதுப்பணித் துறை கூட்டரங்கில் நேற்று (26.3.2025) தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 96வது வாரியக் கூட்டம் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 3 பெரிய துறைமுகங்களும், அறிவிக்கப்பட்ட 17 சிறு துறைமுகங்களும் உள்ளன. பெரிய துறைமுகங்களான சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை ஒன்றிய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

கடலூர், நாகப்பட்டிணம், பாம்பன், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய 6 தமிழ்நாடு அரசின் சிறு துறைமுங்களாக உள்ளன. மேலும், தனியார்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு என 11 சிறு துறைமுகங்களை பயன்படுத்தி வருகின்றனர். அனைத்து சிறு துறை முகங்களும் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 14 உறுப்பினர்கள் கொண்ட வாரியத்தின் கீழ் செயல்படுகிறது.

நேற்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தின்கீழ், இந்த ஆண்டின் செயல்பாடுகள், அடுத்த ஆண்டின் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

அமைச்சர் அவர்கள், வாரியக் கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். அமைச்சர் அவர்களின் உரையில், ஒன்றிய அரசுக்கு தேவையான விவரங்களை காலதாமதம் இல்லாமல் அனுப்பி, ஒன்றிய அரசு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றும், புதியதாக பதவியேற்றுள்ள துணைத் தலைவர் வெங்கடேசன் தனிக் கவனம் செலுத்தி அனைத்து திட்டங்களையும் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

சிறு துறைமுகங்களை அனைத்து வகையிலும் வளர்ச்சிபெற போதிய திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும், அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். அதன்பின், ஒவ்வொரு உறுப்பினர்களும் அவர்களுடைய கருத்துகளை தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை அரசுச் செயலாளர் இரா. செல்வராஜ் கால்நடை, மீன் வளத்துறை அரசுச் செயலாளர் என்.சுப்பையன், பொதுப்பணித்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணை தலைவர் / தலைமை நிர்வாக இயக்குநர் T.N.வெங்கடேசன் , நிதித் துறை துணைச் செயலாளர் பிரதிக்தயாள், கடல்சார் மாநில துணைத் தலைவர் எம்.அன்பரசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்குப் பெற்றனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் (டிஎன்பிஎல்) ஆலை விபத்துகள் மற்றும் ஆலைக்கு உள்ளேயும், வெளியிலும் பல்வேறு காரணங்களினால் உயிரிழந்த பணியாளர்களின் ஏழு (7) வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வாரிசு நிரந்தர பணிக்கான ஆணைகளை அமைச்சர்கள் டி.ஆர். பி.ராஜா, வி.செந்தில் பாலாஜி இணைந்து வழங்கினர். உடன் டிஎன்பிஎல் நிறுவன தலைவர் சந்தீப் சக்சேனா, அருண் ராய், ஆகியோர் உள்ளனர்.

**100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்**

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு !



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அறிக்கை வருமாறு:

100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் **29.3.2025 சனிக்கிழமை, காலை 9.00 மணி அளவில்** மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றியங்களில் கண்டன பொதுக்கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

| ஒன்றியம் | ஆர்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| குன்றாண்டர்கோவில் கிழக்கு, மத்தியம் | கிள்ளுக்கோட்டை |
| குன்றான்டார்கோவில் மேற்கு | வைத்தூர் |
| புதுக்கோட்டை தெற்கு | இச்சடி |
| புதுக்கோட்டை வடக்கு | பெருங்களூர் |
| கறம்பகுடி தெற்கு | கருவட தெரு |
| கறம்பக்குடி வடக்கு | ரெருநாதபுரம் |
| கந்தர்வகோட்டை வடக்கு | தச்சங்குறிச்சி |
| கந்தர்வகோட்டை தெற்கு | கந்தர்வகோட்டை |
| அன்னவாசல் வடக்கு | விளத்துப்பட்டி அஞ்சல் அலுவலகம் |
| அன்னவாசல் தெற்கு | பரம்பூர் |
| விராலிமலை மேற்கு | கொடும்பாளூர் |
| விராலிமலை கிழக்கு, மத்திய ஒன்றியங்கள் | ஆவூர் நால்ரோடு |

ஏற்பாடுகளை மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,

செயல்வீரர்கள், மாவட்ட ஒன்றிய, நகர, கிளை அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**கே.கே. செல்லபாண்டியன்,** மாவட்ட கழக செயலாளர்

புதுக்கோட்டை வடக்கு



மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி தலைமையில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின்சாரம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மேலாண்மை இயக்குநர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முழுவதும்

# கோடை காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவுறுத்தல்!

*சென்னை, மார்ச் 28 -*

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், நேற்று முன்தினம் (26.03.2025) எதிர்வரும் கோடைகாலத்தில் தமிழ்நாடு முழு வதும் தடையில்லா மற்றும் சீரான மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி அவர்கள் அனைத்து தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடன் விரிவான கலந்தாய்வு மேற்கொண்டார்.

மாநிலத்தில் உள்ள முக்கிய மின் உற்பத்தி நிலையங்களின் தற்போதைய உற்பத்தித் திறன், உச்ச மற்றும் குறைவான மின் தேவை நேரங்களில் சுழற்சி மாற்ற உற்பத்தி நிலைகள் (Peak vs OffPeak Generation), மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் (Power Purchase Agreement), மின் தொடரமைப்பு மற்றும் மின் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்து வதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாநிலத்தின் மின் தேவையினை பொறுத்தமட்டில், கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் உச்சபட்ச மின்தேவை முறையே 17,279 மெகாவாட் மற்றும் 18,584 மெகாவாட்டை எட்டியது. இந்த உச்சபட்ச மின் தேவையானது எவ்வித மின்தடையுமின்றி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல், எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் உச்சபட்ச மின்தேவை முறையே 19,500 மெகாவாட், 21,943 மெகாவாட் மற்றும் 22,079 மெகாவாட் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!**

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இந்த கோடைகாலத்தில் மாநிலத்தில் மின் தேவையை முழு அளவில் பூர்த்தி செய்ய பல்வேறு ஆதாரங்களிலிருந்து மின்சாரத்தை ஒருங்கிணைக்கும் விரிவான திட்டத்தினை தமிழ்நாடு மின்சார வாரியம் வகுத்துள்ளது. அதன்படி வாரியத்தின் சொந்த மின் உற்பத்தி நிலையங்களில் (அனல், புனல், காற்றாலை, சூரியசக்தி மற்றும் எரிவாயு) முழுத்திறனுடன் மின்சாரம் உற்பத்தி செய்யும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்பாராதவிதமாக அனல் மின் நிலையங்களில் பழுது ஏற்படும் பொழுது கூடுதலாக கவனமாக கொள்முதல் செய்யப்படும் மின்சாரம் பிற மாநிலங்களுடன் மின்பரிமாற்றத்தின் வாயிலாக கிடைக்கப் பெறும் மின்சாரம் மற்றும் குறுகியகால ஒப்பந்தங்களின் மூலம் கிடைக்கும் மின்சார த்தையும் ஒருங்கிணைத்து மின் தேவையினை பூர்த்தி செய்வதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மின் தொடரமைப்பு மற்றும் மின் விநியோக உள்கட்டமைப்பு மேம்பாட்டைப் பொறுத்தவரை, கோடைகால மின் தேவையை திறம்பட எதிர்கொள்ளும் வகையில், 202425 ஆம் நிதியாண்டில் இதுவரை 400 கி.வோ. திறன் உள்ளிட்ட 23 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 93 உயரழுத்த மின் மாற்றிகளின் திறன் உயர்த்தப்பட்டு, மின்பளுவை சீராக்குவதற்காக 148 புதிய மின்னூட்டிகள் நிறுவப்பட்டு இயக்கத்தில் உள்ளன. மின்பகிர்மான மின்மாற்றிகளை பொறுத்தவரை, அதிக சுமையுள்ள 3,983 மின்மாற்றிகள், குறை மின்னழுத்த பிரச்சினை உள்ள 2,944 மின்மாற்றிகள் மற்றும் மேம்பாட்டு அடிப்படையில் 19,899 மின்மாற்றிகள் என மொத்தம் 17,826 புதிய மின்மாற்றிகள் தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**இருப்பில் தளவாடப் பொருட்கள்!**

கோடைகாலத்தை எதிர்கொள்ளும் வகையில் 11,922 கி.மீ. நீளமுள்ள மின்கம்பிகள், 1,314 மின்மாற்றி கள், 1,895 கி.மீ. நீளமுள்ள புதைவட கம்பிகள் மற்றும் 2,250 பில்லர் பாக்ஸ்கள் உள்ளிட்ட முக்கிய தளவாடப் பொருட்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்பொழுது +2 மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் நடைபெற்று வரும் சூழலில் மாணவர்களின் தேர்வு நேரத்தை கருத்தில் கொண்டும், கோடை வெயிலின் தாக்கத்தால் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை தவிர்க்கும் வகையிலும், தடையில்லா மற்றும் சீரான மின் விநியோகத்தை உறுதி செய்ய, அனைத்து துணை மின் நிலையங்களிலும் வரும் 30.04.2025 வரை மாதாந்திர பராமரிப்பு பணிகளுக்காக மின் நிறுத்தம் செய்யவேண்டாம் என தலைமைப் பொறியாளர்களுக்கு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், இரவு நேரங்களில் மின் தடங்கல் ஏற்பட்டால், அதனை உடனுக்குடன் சரி செய்ய தேவையான பணியாளர்களுடன் தயார் நிலையில் இருக்குமாறு அனைத்து பொறியாளர்களையும் அவர் கேட்டுக் கொண்டார்.

மின் தடங்கல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மற்றும் மின்னகம் வழியாக பெறப்படும் குறைகள் அனைத்திற்கும் உடனடி தீர்வு காண சிறப்பு கவனம் செலுத்தி, புகார்களை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டுமென அலுவலர்களுக்கு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

**முழு அர்ப்பணிப்புடன் பணிகளை மேற்கொள்வீர்!**

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டின் முழு மின்சார தேவையை கருத்தில் கொண்டு, தடையில்லா மின்சார விநியோகத்தை உறுதி செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் முழு அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மேலாண்மை இயக்குநர் மரு. ஜெ . ர ா த ா கி ரு ஷ் ண ன் , அனைத்து மேலாண்மை இயக்குநர்கள், இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் தொகுதி கொரடாச்சேரி ஒன்றியம்

# தேவர்கண்டநல்லூர் கிராம நிர்வாகக் கட்டிடத்தை புதுப்பிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் - பூண்டி கே.கலைவாணன் வேண்டுகோள்!

*சென்னை, மார்ச் 28 -*

திருவாரூர் தொகுதி உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் கேட்ட கேள்வியும் அதைத் தொடர்ந்து அமச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அளித்த பதிலும் வருமாறு

திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தேவர்கண்டநல்லூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன்**, திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தேவர்கண்டநல்லூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிப்பது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பூண்டி கே.கலைவாணன்:** கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது ஊரக உள்ளாட்சித் துறை வாயிலாகவோ கட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லாத ஒரு சூழல் உள்ளது. எனவே, திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் மாத்திரம் 85 கிராம நிருவாக அலுவலர்கள் வாடகைக் கட்டடத்திலிருந்து தங்களது பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது, குறிப்பாக பெண்களுக்கு முன்னுரிமை வழங்கும் இந்தத் திராவிட மாடல் ஆட்சியில் கழிவறை வசதி இல்லாத அலுவலகக் கட்டடத்தில் பணியாற்றும் பெண் கிராம நிருவாக அலுவலர்கள் மிகவும் அல்லலுறுகிறார்கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர்கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தற்போது கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்களைத் தனியாகக் கட்டாமல், ஊராட்சி ஒன்றியத்திலேயே, ஒவ்வொரு கிராமங்களிலும் பஞ்சாயத்து அலுவலகம் கட்டப்படும்போது, அதிலே ஒரு பகுதி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கப்படுகிறது. திருவாரூரைப் பொறுத்தவரையில், மொத்தம் 67 கிராம நிருவாக அலுவலகங்கள் உள்ளன. அவற்றில், 57 கிராம நிருவாக அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன; 10 கிராம நிருவாக அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான வேறு அலுவலகக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட கிராம நிருவாக அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்டுகின்ற பணியையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**பூண்டி கே. கலைவாணன்:** திராவிட மாடல் ஆட்சியில் துவங்கப்பட்ட 'கிராமச் செயலகம்' என்ற திட்டமானது அனைவராலும் போற்றப்படக்கூடிய திட்டமாக இருந்தாலும், ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் அதற்கான போதிய இடம் இல்லாத காரணத்தினால், கிராமச் செயலகம் அமைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன என்பதைத் தங்களின் வாயிலாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய அத்திகடை ஊராட்சியில், 'நிலுவை இனம்' என்றுள்ள நில வகைப்பாட்டை மாற்றி, காலம் காலமாக 100 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வருபவர்களுக்கு, இன்னும் சொல்லப்போனால், 1 கோடி ரூபாய்க்கும்மேல் மதிப்புள்ள கட்டடங்கள் கூட வீடுகளாக உள்ள நிலையில், சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய மனைப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்றும், நகரப் பகுதிகளிலுள்ள 'சர்க்கார்' என்ற நில வகைப்பாட்டினை மாற்றி, சம்பந்தபட்டவர்களுக்கு பட்டாக்கள் வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** வகைப்பாடு மாற்றக்கூடிய அந்த இடமாக இருக்குமென்று சொன்னால், அதை வகைப்பாடு மாற்றித் தருகிறோம். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடங்களைப்பற்றி எனக்கு ஒரு மனுவாக கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



திருச்சி தில்லை நகர சாஸ்திரி சாலையில் மறைந்த முன்னாள் அமைச்சர் செல்வராஜ் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களின் ஆலோசனையின் படி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் ஆகியோர் தலைமையில் தி.மு.க.வினர் நேரில் சென்று அன்னாரின் திருவுவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம், சேர்மன் துரைராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை விஜி, டோல்கேட் சுப்பிரமணி, கருணை ராஜா, கண்ணன், பாலமுருகன், கமல் முஸ்தபா உட்பட பலர் கலந்து கொண்டனர்.